# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 12/2021 நாள்: 16.09.2021

### ஊரக உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவோர் 18.09.2021 சனிக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்யலாம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் அறிவிக்கைகளையும், ஏனைய 28 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தற்செயல் தேர்தல் அறிவிக்கைகளையும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்டதைத் தொடர்ந்து, 15.09.2021 முதல் வேட்புமனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. செலவாணி முறிச்சட்டம், 1881, பிரிவு 25 (Negotiable Instruments Act, 1881)-ன் கீழ் 18.09.2021 சனிக்கிழமை பொது விடுமுறையாக அறிவிக்கப்படாததால் அரசு விடுமுறை நாளாக இருப்பினும், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுவை தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் 18.09.2021 சனிக்கிழமை அன்று தாக்கல் செய்யலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

16/9/2021

மக்கள் தொடர்பு அலுவலர்